


**13. 08. 2025**

## தலைப்பு செய்திகள்

- இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இயக்கம் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா பெருமிதம் தெரிவித்தார்.
- போலி உரங்கள், ரசாயனங்கள் தயாரிப்போர் மீது நடவடிக்கை எடுக்கும் புதிய சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் கூறினார்.
- போதை பழக்கம் வேரோடு களையப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சமூக நீதித்துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் வலியுறுத்தினார்.
- நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி 759 பேருக்கு இன்று பட்டங்களை வழங்கி கவுரவித்தார்.
- இந்தோனேசியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் **Ajay Malik, Shanker Heisnam** இணை முன்னேறியுள்ளது.

### இனி விரிவான செய்திகள்

********

### அமித்ஷா

ஹர்கர் திரங்கா இல்லந்தோறும் மூவர்ண தேசிய கொடி இயக்கம் மிகப்பெரிய மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தமது இல்லத்தில், தேசிய கொடியை இன்று ஏற்றிவைத்த அமைச்சர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில் இல்லந்தோறும் தேசிய கொடி

இயக்கம் ஒற்றுமை என்ற நூல் மூலம் தேசத்தை இணைத்து, தேசபற்றை மக்களிடையே வலுப்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டார்.

**தமிழகத்தில் அஞ்சல் நிலையங்களில் தேசிய கொடி** விற்பனை தொடங்கியுள்ள நிலையில் அனைத்து மாவட்டங்களிலும் மாணவ மாணவியர் பங்கேற்கும் ஹர்கர் திரங்கா தேசிய கொடி இயக்கம் முழுவீச்சில் நடைபெறுகிறது.

**நாகையில் தேசிய மாணவர் படையினர் பங்கேற்ற** இல்லந்தோறும் மூவர்ண கொடி பேரணி இன்று நடைபெற்றது.

இதில் பங்கேற்ற மாணவி இல்லங்களில் தேசிய கொடி ஏற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**வாய்ஸ்**

**விழுப்புரம் தலைமை அஞ்சலகத்தில் அஞ்சலக** ஊழியர்கள் பங்கேற்ற தேசிய கொடி விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான பணியாளர்கள் பங்கேற்றனர்.

**கன்னியாகுமரி மாவட்டம்** நாகர்கோவிலில் உள்ள தலைமை அஞ்சல் நிலையத்தில் தேசிய கொடி விற்பனை களைகட்டியுள்ளது.

********

**சுதந்திரதினம்**

நாட்டின் 79ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி டெல்லி செங்கோட்டையில் நாளை மறுநாள் நடைபெறும் சிறப்பு கொண்டாட்டங்களை பார்வையிட 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 210 பஞ்சாயத்து தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர்.

கிராம ஊராட்சிகளின் கட்டமைப்பு, மேம்பட்ட பொதுசேவை, உள்ளடக்கிய சமுதாய நிகழ்ச்சிகள், போன்றவற்றை முன்னெடுத்து சென்ற பெண் பஞ்சாயத்து தலைவர்கள் இதில் அதிக அளவு இடம்பெற்றுள்ளனர்.

மேலும் இல்லந்தோறும் மூவர்ண கொடி பிரச்சாரம், பிரதமரின் வீட்டு வசதி திட்டம், கிராமப்புறங்களில் அரசின் இந்திர தனுஷ் தடுப்பூசி திட்டம் உள்ளிட்ட மத்திய அரசின் சிறப்பு திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்திய கிராம பஞ்சாயத்து தலைவர்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஊராட்சி தலைவர்களை கவுரவிக்கும் வகையில் புதுதில்லியில் நாளை நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த கற்றல் மேலாண்மை, திறன் மேம்பாட்டு திட்டம் தொடங்கிவைக்கப்படுகிறது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவில், தன்னிறைவை எட்டிய பஞ்சாயத்துகளின் அளப்பரிய பங்கை பறைசாற்றும் வகையில் “சுய சார்பு பஞ்சாயத்துகள் மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான தனித்துவ அடையாளம்” என்பதை கருப்பொருளாக கொண்டு இந்நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

********

**கிராம சபை கூட்டம்**

சுதந்திர தினத்தை ஒட்டி தமிழகம் முழுவதும் அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டங்கள் நாளை மறுநாள் நடைபெற உள்ளன.

இதில் கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, தூய்மையான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்தல், திட்ட பணிகளின் முன்னேற்றம் உள்ளிட்டவை குறித்து இதில் விவாதிக்கப்படுகிறது.

திருச்சி, நாகை மாவட்டங்களில் நடைபெறும் கிராம சபைக்கூட்டங்களில் மக்கள் பங்கேற்க ஆட்சித்தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

********

**சிவ்ராஜ்சிங் சவ்ஹான்**

போலி உரங்களையும், ரசாயனங்களையும் தயாரிப்போர் மீது நடவடிக்கை எடுக்கும் புதிய சட்டத்தை மத்திய அரசு விரைவில் அறிமுகம் செய்யும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று உழவர் அமைப்பு தலைவர்களுடனும், சாகுபடியாளர்களுடனும் கலந்துரையாடிய அமைச்சர் விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்கள் விரைந்து முன்னெடுத்து செல்லப்படுவதாக கூறினார்.

இரவும் பகலும், உழைக்கும் விவசாயிகள் உலகிற்கே உணவளிப்பதாக பெருமிதம் தெரிவித்த அமைச்சர் வாழ்வின் ஆதாரமாக விவசாயிகள் திகழ்கிறார்கள் என்று பாராட்டினார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் வெளிநாட்டு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் துணிச்சலுடன் வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்திய பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு நன்றி தெரிவித்தனர்.

இதன்மூலம் நாட்டின் வேளாண்மையும், ஊரக பிரிவுகளும் தற்சார்பை எட்டும் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

********

**வீரேந்திரகுமார்**

போதை பொருட்கள் பயன்பாடு, நாட்டின் சமூக கட்டமைப்பை பெரிதும் பாதிப்பதாக, மத்திய சமூக நீதி அதிகாரம் அளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திரகுமார் தெரிவித்தார்.

போதை பொருள் இல்லா இந்தியா இயக்கத்தின் 5ஆவது ஆண்டு நிகழ்ச்சியில் இன்று புதுதில்லியில் உரையாற்றிய அமைச்சர், போதை பழக்கம் நாட்டிலிருந்து, வேரோடு களையப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தனிநபரின் ஆரோக்கியம் மட்டுமல்லாமல், குடும்பம் மற்றும் சமூகத்தின் நலத்தையும், போதை பழக்கம் பாதிக்கும் என்பதால், இளையோர் அதிலிருந்து விலகியிருப்பதோடு, பிறரையும் தடுத்து நிறுத்த அறிவுறுத்தினார்.

போதை பழக்கத்தின் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும் இதில் இடம்பெற்றது.

இதுதொடர்பான போட்டிகளில் வெற்றிபெற்ற மாணாக்கருக்கு பரிசுகளை வழங்கியதோடு விழிப்புணர்வை ஏற்படுத்தும் தன்னார்வலர்களையும் அமைச்சர் கவுரவித்தார்.

********

**வட்டமேஜை மாநாடு**

இந்தியா – சிங்கப்பூர் நாடுகளிடையே, 3ஆவது அமைச்சர்கள் நிலையிலான வட்டமேஜை கூட்டம் புதுதில்லியில் இன்று தொடங்கியது.

மத்திய அமைச்சர்கள் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திருமதி நிர்மலாசீதாராமன், திரு.பியூஷ்கோயல், திரு.அஷ்விணி வைஷ்ணவ் ஆகியோர் நம் நாட்டின் சார்பில் இதில் பங்கேற்றுள்ளனர்.

சிங்கப்பூர் துணை பிரதமர் Gan Kim Yong மற்றும் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜோஷ்மின் டியோ ஆகியோர் இதில் கலந்துகொள்கின்றனர்.

இந்தியா சிங்கப்பூர் இடையிலான ஒத்துழைப்பிற்கான புதிய அம்சங்கள் இதில் விவாதிக்கப்படுகிறது.

மேலும் இருநாடுகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும் இதில் கண்டறியப்படுகிறது.

இந்திய சிங்கப்பூர் அமைச்சர்கள் நிலையிலான பேச்சுவார்த்தைகள் கடந்த 2022 செப்டம்பர் முதல் நடைபெற்று வருகிறது.

********

## ஆளுநர்

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தின் 32ஆவது பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி இன்று 759 பேருக்கு நேரடியாக பட்டங்களை வழங்கினார்.

இப்பல்கலைகழகத்திற்குட்பட்ட 104 உறுப்பு கல்லூரிகளில் பயின்ற 37 ஆயிரத்து 376 பேருக்கு பட்டங்கள் இன்று அளிக்கப்பட்டன.

தங்கபதக்கம் பெற்ற 109 பேரில் 96 பேர் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

********

## முதலமைச்சர்

திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

தேர்தலை ஆணையம் தேர்தல் நியாயமாக நடத்த வேண்டும் என்று கோரும் தீர்மானம் உட்பட 3 தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

********

## வாழ்நாள் சான்று முகாம்

நாடுதழுவிய நான்காவது மின்னணு வாழ்நாள் சான்று முகாம் வரும் நவம்பர் 1 முதல் 30ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

ஓய்வூதியதாரர்களின் முக அடையாளத்தை பயன்படுத்தும் சிறப்பு தொழில்நுட்பம் மூலம் மின்னணு ஆளுமைக்கு இதில் வகை செய்யப்படுகிறது.

நாடுமுழுவதும் ஆயிரத்து 850 மாவட்டங்கள், பெருநகரங்கள், நகரங்களில் இந்த முகாம் நடைபெறும் என்று மத்திய ஊழியர் நலன் ஓய்வூதியதாரர்கள் விவகாரங்களுக்கான அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியங்களை விநியோகிக்கும் வங்கிகள், இந்திய தபால் பண பரிவர்த்தனை வங்கிகள், ஓய்வூதியதாரர் நல சங்கங்கள், ரயில்வே, ஆதார் அடையாள அட்டை நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்பட உள்ள இந்த பிரச்சாரத்தின் மூலம் குக்கிராமங்களில் உள்ள ஓய்வூதியதாரர்களும் பயன்பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இந்திய தபால் பண பரிவர்த்தனை வங்கிகள் ஆயிரத்து 600 கிராமங்களில் இம்முகாம்களை நடத்த உள்ளது.

இப்பணியில் அஞ்சல் அலுவலர்கள் மற்றும் கிராம சேவகர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

ரயில்வே, ராணுவம், ராணுவ அமைச்சகங்களும் தத்தம் துறைகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஓய்வூதியர்களுக்கான இந்த சிறப்பு முகாமை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

********

**திருச்சி**

திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தூய்மை பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை நல திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வி.சரவணன் திருமண நிதி உதவி, மகப்பேறு நிதி உதவி உள்ளிட்டவைகளின் கீழ் 350 தூய்மை பணியாளர்களுக்கு 11 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

**வாய்ஸ்**

********

**மீனவர்கள்**

இலங்கை சிறையில் உள்ள 61 மீனவர்களை விடுவிக்க கோரியும், தொடர் கைது நடவடிக்கையை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் ராமேஸ்வரம் விசைபடகு மீனவர்களின் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் இன்றும் தொடர்கிறது.

தங்கச்சி மடத்தில் 300க்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

********

**இருவரி**

**தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில்** பங்கேற்க தமிழக முதலமைச்சர் வரும் 16ஆம் தேதி அங்கு செல்ல உள்ளதை அடுத்து 16, 17 ஆகிய இரண்டு நாட்கள் அம்மாவட்டத்தில் ட்ரோன் பறக்க தடை விதிக்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் MBBS BDS** முதல் **சுற்று கலந்தாய்வில்** கல்லூரிகளை தேர்வு செய்வதற்கான காலஅவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மாணாக்கர் வரும் 16ஆம் தேதிவரை இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று மருத்துவ கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

இறுதி பட்டியல் வரும் 18ஆம் தேதி வெளியிடப்படும்.

********

**கோவில்**

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் ஆவணி திருவிழா நாளை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.
விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் வரும் 23ஆம் தேதி நடைபெறும் என்று எமது தூத்துக்குடி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

********

**வானிலை**

வங்க கடலில் ஆந்திரா, தெற்கு ஒடிசா கடலுக்கு அப்பால் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவாகியுள்ளது.

இது அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்து, வடக்கு ஆந்திரா, தெற்கு ஒடிசா பகுதிகளை கடக்க கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக திருவள்ளூர் ராணிப்பேட்டை நீலகிரி கோவை மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தென் தமிழக கடலோரம் மன்னார் வளைகுடா குமரிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இதற்குட்பட்ட பகுதிகளுக்கு அடுத்த 3 நாட்களுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

********

**டென்னிஸ்**

இந்தோனேசியாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு இந்தியாவின் **Ajay Malik, Shanker Heisnam** இணை முன்னேறியது.

ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு **Ajay Malik-**க்கும், **Karan Singh-**ங்கும் முன்னேறியுள்ளனர்.

********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**